சுருக்கம்

பள்ளிக் கல்வி – பாடத்திட்டம் – 2020–2021–ஆம் கல்வியாண்டிலிருந்து 8–ஆம் வகுப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு முப்பருவ முறையில் வழங்கப்பட்டு வரும் பாடநூல்களை ஒன்றிணைத்து ஒவ்வொரு பாடத்திற்கும் ஒரே பாடநூலாக வழங்க அனுமதி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வி (ERT)த்துறை

அரசாணை (நிலை) எண்.187

நாள் 23.10.2019
திருவள்ளுவராண்டு 2050
விகாரி வருடம் – ஐப்பசி 06

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.143, பள்ளிக் கல்வித் (V1) துறை, நாள் 19.09.2011.
2. அரசாணை (நிலை) எண்.164, பள்ளிக் கல்வித் (MS) துறை, நாள் 13.09.2019.
3. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் கடித ந.க.எண்.5329/ஈ2/2014, நாள் 30.09.2019.

-----

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் முப்பருவ முறை அறிமுகப்படுத்தப்பட்டு 1 முதல் 8–ஆம் வகுப்புகளுக்கு 2012–2013–ஆம் கல்வியாண்டிலிருந்தும், 9 மற்றும் 10–ஆம் வகுப்புகளுக்கு 2013–2014–ம் கல்வியாண்டிலிருந்தும் செயல்படுத்திட ஆணை வெளியிடப்பட்டது. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் (திருத்தம்) சட்டம் 2019–ன்படி, மாநிலப் பாடத்திட்டத்தினை பின்பற்றி செயல்பட்டு வரும் பள்ளிகளில் 5 மற்றும் 8–ஆம் வகுப்பு மாணாக்கர்களுக்கு 2019–2020–ஆம் கல்வியாண்டு முதல் பொதுத்தேர்வு நடத்த ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர், குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 இயற்றப்பட்டதைத் தொடர்ந்து, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி 1 முதல் 9 வகுப்புகளுக்கு முப்பருவ முறை அறிமுகப்படுத்தப்பட்டது என்றும், முப்பருவ முறையில் ஒவ்வொரு பருவத்திற்கும் தனித்தனியான பாடநூல்கள் மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டு வந்தன என்றும், நடப்பு கல்வியாண்டு முதல் 9–ஆம் வகுப்பு மாணாக்கர்களுக்கு முப்பருவ முறையில் வழங்கப்பட்டு வந்த பாடநூல்கள்

ஒன்றிணைக்கப்பட்டு ஒரே பாடநூலாக வழங்கப்பட்டு வருகிறது என்றும், 8–ஆம் வகுப்பு மாணாக்கர்களுக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, 2019–2020–ஆம் கல்வியாண்டு முதல் பொதுத்தேர்வு நடத்தப்பட உள்ளதால், 8–ஆம் வகுப்பிற்கு ஒவ்வொரு பாடத்திற்கும் மூன்று பருவங்களாக தனித்தனியாக வழங்கப்படும் பாடநூல்களை ஒன்றாக இணைத்து ஒரே பாடநூலாக வழங்கினால் மாணாக்கர்களுக்கு பயனுள்ளதாக அமையும் என்றும், எனவே 8–ஆம் வகுப்பு மாணாக்கர்களுக்கு முப்பருவ முறையில் வழங்கப்பட்டு வரும் பாடநூல்களை ஒன்றிணைத்து ஒரே பாடநூலாக வழங்க ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று, 8–ஆம் வகுப்பு மாணாக்கர்களுக்கு 2020–2021–ம் கல்வியாண்டிலிருந்து முப்பருவ முறையில் வழங்கப்பட்டு வரும் பாடநூல்களை ஒன்றிணைத்து ஒவ்வொரு பாடத்திற்கும் ஒரே பாடநூலாக வழங்க மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை–6.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்,
சென்னை–6.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை–6.
நகல்
மாண்புமிகு பள்ளிக்கல்வி,இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர்,
சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
23/10/19